<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No.393/2023**</u>

<u>**வழக்கு சாட்சி PW-10**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.முகமது தமிழ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | அமான்நுல்லாகான் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | பெங்களூர் | வயது | : | 31 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 25.02.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் தற்போது பெங்களூரில் உள்ள வீ.கேர் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.04.2023 அன்று தென்காசி மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் நான் பணியில் இருந்தபோது, நெல்லையப்பர் என்பவர் என்னிடம் வயிற்றில் கத்திக்குத்து காயத்துடன் சிகிச்சைக்காக வந்தார். அவரிடம் விசாரித்தபோது, ஆய்க்குடி சுடலை கோவிலுக்கு அருகில் (காவல்நிலையத்திற்கு அருகில்) வைத்து தெரிந்த நபர் ஒருவர் கத்தியால் வலது புற வயிற்றில் குத்தியதாக கூறினார். அவர் ஆய்க்குடி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று, மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்று, அதன் பின்னர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவரை நான் பரிசோதனை செய்தபோது, அவர் சுயநினைவுடன் இருந்தார்.

அவருக்கு வயிற்றின் தொப்புளுக்கு அருகில் வலதுபுறம் 2 x 2 x 2 cm அளவில் வெட்டுக்காயம் இருந்தது.

அந்த வெட்டுக்காயத்திற்கு ஏற்கனவே ஆய்க்குடி அரசு மருத்துவமனையில் தையல் போடப்பட்டிருந்தது. அவருக்கு நுண்கதிர்

படம் எடுத்து பார்த்ததில் இரத்தக்கசிவு வயிற்றுப்பகுதியில் இருந்ததாக தென்பட்டது. எனவே, அவருக்கு சீ.டீ.ஸ்கேன எடுக்கப்பட்டதில் வயிற்றுப்பகுதியில் இரத்தக்கசிவு இருந்தது தெரிய வந்தது. அவருக்கு அவசர அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அவர் 23.04.2023ம் தேதி மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு நான் வழங்கிய சிகிச்சை விபரச்சான்று என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.10 ஆகும். சிகிச்சையின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயம் ஆகும். கத்தியால் குத்தும்போது மேற்குறிப்பிட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

பொதுவாக வயிற்று பகுதியில் தோலின் தடிமன் 2 இன்ச்-லிருந்து 3 இன்ச் வரை இருக்கும் என்றால் அவரவர் உடல் பருமனை பொறுத்து இருக்கும். கத்தியால் குத்தும்போது சிதைந்தகாயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, குத்துகாயம் ஏற்படும் போது சைடில் சிதைந்த காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. காயம்பட்டவர் எந்த வகையான கத்தி என்று என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆயுதத்தை காண்பித்து ஆய்வாளர் என்னிடம் கருத்துரு பெறவில்லை என்றால் சரிதான்.

காயம்பட்டவருக்கு தோலின் மேற்பகுதியில் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வெளியிலிருந்து வயிற்றின் உள்பகுதி வரைக்கும் அவருக்கு காயம் இருந்தது. நான் வழங்கிய சான்றிதழில் கொடுங்காயம் என கருத்துரு கூறவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போதும் நான் கருத்துரு கூறவில்லை. காயம்பட்டவர் குணமாகி விடுவிக்கப்பட்டார் என்றால் சரிதான். நான் பார்த்த காயங்கள்

பைக்கிலிருந்து ஒரு நபர் கீழே விழும்போது கூர்மையான பொருளின் மீது விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் பைக்கிலிருந்து விழும்போது வேறு பல சிராய்ப்பு காயங்களும் ஏற்பட வாய்ப்புள்ளது, ஆனால் நோயாளிக்கு ஒரு காயம் மட்டும் தான் இருந்தது. மேலும் கண்ணாடித்துகள்கள் எதுவும் காயத்தில் இல்லை. நான் காயம்பட்டவருக்கு அறுவை சிகிச்சை செய்யவில்லை.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

சாட்சி கர்நாடகா மாநிலம்,பெங்களூரில் உள்ள வீ. கேர் மருத்துவமனை யில் உள்ள காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Mohammed Nadeem, Personal Relation Officer கர்நாடகா மாநிலம், பெங்களூர், ஆர்.கே. மருத்துவமனை என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.27 16:22:36 +0530